## மூன்று மத்திய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2014

மூன்று மத்திய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 3008 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க சாதாரண செயற்பாடுகள் மற்றும் 3009 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க விசேட செயற்பாடுகள் கடன் உடன்படிக்கைகளின் iv ஆம் உறுப்புரைகளின் 4.04 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் உடன்படிக்கைகளின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய மட்டத்திலுள்ள கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றாலும் மாகாண மட்டத்தில் மாகாண சபைகளாலும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்திலுள்ள கல்வி அமைச்சு, பரீட்சைத் திணைக்களம் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான கருத்துரைகளைக் கொண்டுள்ளது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கைகளின் படி, நாட்டில் பொது கல்வித்துறை எதிர் நோக்கும் சவால்களை உரைக்கும் கல்வித்துறை அபிவிருத்தி கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் 2013 – 2017 ஐ அமுலாக்குவதற்கு நிதி ஆதரவை வழங்குவதற்கும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்படுகிறது. கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கும் முகவர் கல்வி அமைச்சாகும். கல்வித்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்விக்கும் சமத்துவமான அணுகுதலை அதிகரித்தல், ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் தரத்தை முன்னேற்றுதல் மற்றும் கல்வியின் ஆட்சி மற்றும் சேவை விநியோகத்தைப் பலப்படுத்துதல் என்பன நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கைகளின் படி, நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்துக் கிரயம் ஐ.அ.டொலர் 200 மில்லியனாகும். நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளை 2013 ஆகஸ்ட் 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியல்படுத்தப்பட்டது.

### 1.3 ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிங்கமைய தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளை தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு வடிவமைத்தல் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்ட ஆண்டு அறிக்கைகளிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகளைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்படடனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆம் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிரூபம் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) ஆசிய அபிவிருத்தி வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப வைப்பு, அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் பொதுத் திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டு பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டதா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான கல்வி அமைச்சு தொடர்பான 2013 இன் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டதிகாரச் சட்டத்தின் முதலாம் பட்டோலையின் தலைப்பு 126 இற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் பொதுத் திறைசேரியின் 2014 திசெம்பர் 01 ஆம் திகதிய 239/2014 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிரூபம் என்பவற்றின் ஏற்பாடுகளோடு தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் திறைசேரி கணணி அச்சுத்தாள்கள் மற்றும் ஆண்டு மதிப்பீடுகள் மற்றும் கல்வித் துறையின் மூன்று மத்திய நிறுவனங்களால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் இணங்கியிருந்தன என்றும்,

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் போது அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள்நிரம்பல்கள் என்பன பொதுத்திறைசேரியால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அந்த திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கபட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமனவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கத்திற்கு புறம்பாக பயன்படுத்திய நிதிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிகழ்ச்சித்திட்டத்தால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளிற்கான ஒதுக்கீடுகளில், நிகழ்ச்சித்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் மேவப்பட வேண்டப்பட்டியிருக்காத நடவடிக்கைளான இலங்கை ஆசிரியர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவையின் புதிய சேவைக் குறிப்பில் கவனம் செலுத்துவதற்காக செய்யப்பட்ட புதினப்பத்திரிகை விளம்பரத்திற்காக ரூபா 2.50 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) இல் தொழில்நுட்ப பாட துறைக்கான கற்கைகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தலில் சமுதாய விழிப்புணர்வுக்காக பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிக்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் ரூபா 13.80 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது ‘‘மஹிந்த சிந்தனையின் இலக்கினை அடைதல்’’ என்ற தலைப்பிடப்பட்ட வெளியீட்டின் 100,000 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரசியல் தலையீடு மற்றும் பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) இல் தொழில்நுட்ப பாடத் துறையை கற்பிப்பதற்காக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை தூண்டுதல் மற்றும் ஊக்குவித்தலுடன் தொடர்புபட்டிருக்காதவைகளை வெளியீடுகளிலுள்ள விடயங்கள் கொண்டுள்ளன. மேலும், வெளிப்படையான வழியில் அச்சிடலை தெரிவுசெய்வதற்காக கொள்வனவு நடைமுறை பிரயோகிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கொள்கை மற்றும் செயலாற்றல் மீளாய்வுப் பிரிவு வெளியீடுகளின் சகல பிரதிகளையும் நேரடியாக கையேற்றிருந்ததுடன் புத்தக விநியோகத்தின் ஆதாரப்படுத்தலிற்காக ஆவணச் சான்றுகள் எதுவும் பிரிவால் பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலும், சர்வதேச கணனி அனுமதிப்பத்திரம் மற்றும் சர்வதேச தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பயற்சி பாடநெறியை நடாத்துவதற்கு உள்ளூர் முகவர்களாக உள்ள 02 தனியார் கல்வி நிறுவனங்களில் 77 வலய தகவல் தொழில்நுட்ப தொடர்பால் நிலையங்களின் பதிவிற்காக மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் ரூபா 3.49 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளிற்கு நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை. பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டோ அல்லது கணனிகள் மற்றும் தொடர்புபட்ட உதிரிபாகங்கள், மனித வளங்கள் ஏனைய வசதிகள் போன்ற நிலையங்களில் வளங்கள் இன்மை காரணமாக பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததோ என அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்ன் பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| நன்கொடை முகவர் | 200 | 26,000 | 3,094 | 23.8 | 3,091 | 23.7 | 3,091 |
| மொத்தம் | 200 | 26,000 | 3,094 | 23.8 | 3,091 | 23.7 | 3,091 |

நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கடன் பெறுகைகளில் ஐ.அ.டொலர் 33.32 மில்லியன் பொதுத்திறைசேரியால் மீளப்பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கல்வி அமைச்சிற்கு கட்டு நிதியாக ஐ.அ.டொலர் 23.7 மில்லியன் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 250 மஹிந்தோதய தொழில்நுட்ப கல்லூரியை நிர்மாணிப்பதற்கு ரூபா 2,791 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதும் ரூபா 7,000 மில்லியன் தொகையான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தது. 02 கல்லூரிகளின் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது

பூர்த்தியாக்கப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய 248 கல்லூரிகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டு இருந்தது. இருந்த போதிலும், ரூபா 970.28 மில்லியன் கிரயத்தில் 250 கல்லூரிகளிற்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள், உயிரியல் முறைமை உபகரணங்கள் மற்றும் எந்திர பொறியியல் தொழில்நுட்ப உபகரணங்கள் குறித்த நோக்கங்களிற்கு பயன்படுத்தாமல் அத்தகைய உபகரணங்கள் தகுதிக் காலத்தின் காலாவதி அனுமதிக்கின்ற கட்டிட நிர்மாணத்திலுள்ள தாமதம் காரணமாக பயன்பாடற்று இருந்தது.

(ஆ) பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர்தரம்) இற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பாடத்துறையின் 250 பாடசாலைகளில், 13 பாடசாலைகளில் வகுப்புக்கள் தொழில்நுட்ப பாடப் பிரிவிற்காக எந்தவொரு மாணவரும் இல்லாமையால் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஏனைய 152 பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடப்பிரிவிற்கான வகுப்புக்கள் 01 இற்கும் 09 இற்கும் இடையில் இருந்தன. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பாடப் பிரிவு பாடசாலைகளில் ஒட்டுமொத்தமாக 167 ஆசிரியர் பற்றாக்குறை இருந்தது.